சார்பு நீதிமன்றம், ஓமலூர், சேலம் மாவட்டம்.

முன்னிலை.- திரு. ஞானபாலகிருஷ்ணன், பி.எஸ்.சி., பி.எல்.,

சார்பு நீதிபதி, ஓமலூர்.

2023 ம் ஆண்டு ஜுன் மாதம் 30-ம் நாள் வெள்ளிக்கிழமை

அசல் வழக்கு எண்.264/2022

CNR No.TNSA19-000915-2022

பழனியம்மாள் .. வாதி

// எதிராக //

சடையன் (எ) சடையகவுண்டர் .. பிரதிவாதி

இந்த வழக்கு இந்நீதிமன்றத்தில் இறுதி விசாரணைக்காக 23.03.2023-ஆம் தேதியன்று என் முன்பாக வரப்பெற்றபோது, வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர்கள் திருமதி V.கவிதா, B.A.,B.L., மற்றும் திரு G. இளையராஜா, B.Sc.,B.L., ஆகியோர்கள் முன்னிலையாகியும், நீதிமன்ற அழைப்பாணையை பெற்றுக் கொண்ட பிரதிவாதி அழைத்தும் ஆஜராகததால் பிரதிவாதிக்கு எதிராக ஒரு தலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டும், வாதி தரப்பு வாதுரைகள் கேட்டும், வழக்கு சங்கதிகள் மற்றும் ஆவணங்களை பரிசீலித்தும், இதுநாள் வரை என் பரிசீலனையில் இருந்து வந்து இந்நீதிமன்றம் இன்று வழங்கும்

## தீர்ப்புரை

தாவா சொத்தினை 2 சம பாகங்களாக நலந்தீது கலந்து பிரித்து அதில் ஒரு பாகத்தினை வாதிக்கு ஒதுக்கீடு செய்து தனி சுவாதீனம் ஒப்படைக்கும் படி முதல் நிலை தீர்ப்பாணை பிறப்பித்தும், அவ்விதம் நீதிமன்றம் குறிப்பிடும் காலத்திற்குள் பிரதிவாதி பிரித்து கொடுக்க முன் வராத பட்சத்தில், சமூகம் நீதிமன்றம் ஆணையாளரை நியமித்து தாவா சொத்தை முதல் நிலை தீர்ப்பாணை அனுசரித்து பாகம் பிரித்து அதில் 1/2 பாகத்தினை வாதிக்கு ஒதுக்கீடு செய்ய இறுதிநிலை தீர்ப்பாணை பிறப்பிக்கும்படியும் மற்றும், பிரதிவாதி தாவா சொத்தினை பொறுத்து வாதியின் அமைதியான கூட்டு அனுபவ

சுவாதீனத்திற்கு இடையூறு செய்யக் கூடாது என்றும், எந்தவொரு வில்லங்க பாராதீனத்திற்கு உட்படுத்தக்கூடாது என்றும் நிரந்தர தடையுத்தரவு பரிகாரம் வழங்கியும், மற்றும் தாவாவிற்கான செலவு தொகையினை வாதிக்கு பிரதிவாதி வழங்கிட வேண்டியும் இந்த தாவா தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. <u>வழக்குரையின் சுருக்கம்-</u>

தாவா சொத்தானது ஆதியில் பிரதிவாதியின் தகப்பனார் தானப்பகவுண்டர் என்பவருக்கு ஓமலூர் சார் பதிவாளர் அலுவலக ஆவண எண் 2610/1955 ன் படி சுயார்ஜித கிரய மூலமாயும், பிதுரார்ஜிதமாயும் பாத்தியப்பட்டு அவரது சுவாதீன அனுபவத்தில் இருந்துவந்து மேற்படி தானப்பகவுண்டர் இறந்த பின்னிட்டு வாரிசுரிமைப்படி அவரது வாரிசுகளான பிரதிவாதியும், அவரது சகோதரர்களும் கடந்த 17.06.1985 ந் தேதியன்று தாரமங்கலம் சார்பதிவாளர் அலுவலக ஆவண எண் 537/1985 என்ற எண்ணில் பதிவு செய்யப்பட்ட பாகப் பிரிவினை பத்திரத்தில் கண்ட ஏ-ஷெட்யூல் சொத்தானது பிரதிவாதிக்கும், அவரது வாரிசுக்கும் பாத்தியப்பட்டது என்று தெளிவாக கண்டு எழுதப்பட்டுள்ளது. தாவா சொத்தில் பிரதிவாதியுடன் வாதியும் அவரது தாயாரும் கூட்டு அனுபவத்திலும், சுவாதீனத்திலும் இருந்து வருகிறார்கள். பிரதிவாதிக்கு அவரது முதல் மனைவியின் மூலம் வாதி மட்டுமே சட்டப்படியான வாரிசுதாரர் ஆவார். பிரதிவாதி இரண்டாவதாக நாகம்மாள் என்பவரை திருமணம் செய்து கொண்டது சட்டப்படி செல்லத்தகாத ஒன்றாகும், வாதி தான் வயதான தனது தாயாரை பராமரித்து வருகிறார். பிரதிவாதி வாதியின் திருமணத்தின் போது எந்தவொரு சீர்வரிசையும் செய்யாமல் பின்னிட்டு தாவா சொத்தில் வாதிக்கு சட்டப்படியான பாகத்தினை பிரித்து கொடுத்துவிடுவதாக உறுதியளித்ததன் பேரில் வாதியும் பிரதிவாதியும் கூட்டு அனுபவத்திலும், சுவாதீனத்திலும் இருந்து வருகிறார்கள்.

இந்நிலையில் பிரதிவாதி தாவா சொத்தில் வாதியின் சட்டப்படியான பாகத்தினை ஏமாற்ற வேண்டுமென்ற கெட்ட எண்ணத்தில் தனது இரண்டாவது மனைவியின் வாரிசுதாரர்களுடன் சேர்ந்து கொண்டு தாவா சொத்தினை வாதிக்கு தெரியாமலும் அவரது அனுமதியில்லாமலும் வேறு மூன்றாம் நபர்களுக்கு வில்லங்க பராதீனம் செய்ய முயற்சித்து வருவதை அறிந்த வாதி கடந்த 18.12.2022ம் தேதியன்று ஊர் பெரியோர்கள் மற்றும் பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் பிரதிவாதியை அணுகி வாதி தனக்குரிய சட்டப்படியான பாகத்தை சுமூகமான முறையில் பிரித்து தனி சுவாதீனம் வழங்குமாறு கேட்டதற்கு பிரதிவாதி பாகம் பிரித்து கொடுக்க முடியாது என்று திட்டவட்டமாக கூறிவிட்டார். தாவா சொத்தில் வாதி, பிரதிவாதியை தவிரவேறு யாருக்கும் எந்தவித உரிமையும், பங்கு பாத்தியமும் எக்காலத்திலும் கிடையாது. ஆகவே பாகப்பிரிவினை மற்றும் நிரந்தரஉறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி இந்த தாவா தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. நீதிமன்ற அழைப்பாணையை பெற்றுக் கொண்ட பிரதிவாதி அழைத்தும் ஆஜராகததால் 16.02.2023-ஆம் தேதியன்று பிரதிவாதிக்கு எதிராக ஒருதலை பட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

4. வாதி தரப்பு கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது.

5. இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை என்னவெனில், வாதி கோரியுள்ளவாறு பாகப்பிரிவினை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரங்கள் வாதிக்கு கிடைக்கத்தக்கதா? என்பதேயாகும்.

6. வாதி தரப்பில் வாதி வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். வா.சாஆ1 முதல் 4 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. பிரதிவாதி தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

7. வாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர், தாவா சொத்தானது ஆதியில் பிரதிவாதியின் தகப்பனார் தானப்பகவுண்டர் என்பவருக்கு ஓமலூர் சார் பதிவாளர் அலுவலக ஆவண எண் 2610/1955ன் படி சுயார்ஜித கிரய மூலமாயும் பாத்தியப்பட்டு , பிதுரார்ஜிதமாயும் பாத்தியப்பட்டு அவரது சுவாதீன அனுபவத்தில் இருந்துவந்து மேற்படி தானப்பகவுண்டர் இறந்த பின்னிட்டு வாரிசுரிமைப்படி அவரது வாரிசுகளான பிரதிவாதியும், அவரது சகோதரர்களும் கடந்த 17.06.1985ந் தேதியன்று தாரமங்கலம் சார்பதிவாளர் அலுவலக ஆவண எண் 537/1985 என்ற எண்ணில் பதிவு செய்யப்பட்ட பாகப் பிரிவினை பத்திரத்தில் கண்ட ஏ-ஷெட்யூல் சொத்தானது பிரதிவாதிக்கும், அவரது வாரிசுக்கும் பாத்தியப்பட்டது என்று தெளிவாக கண்டு எழுதப்பட்டுள்ளது. தாவா சொத்தில் பிரதிவாதியுடன் வாதியும் அவரது தாயாரும் கூட்டு அனுபவத்திலும், சுவாதீனத்திலும் இருந்து வருகிறார்கள். பிரதிவாதிக்கு அவரது முதல் மனைவியின் மூலம் வாதி மட்டுமே சட்டப்படியான வாரிசுதாரர் ஆவார். பிரதிவாதி இரண்டாவதாக நாகம்மாள் என்பவரை திருமணம் செய்து கொண்டது சட்டப்படி செல்லத்தகாத ஒன்றாகும், வாதி தான் வயதான தனது தாயாரை பராமரித்து வருகிறார். பிரதிவாதி வாதியின் திருமணத்தின் போது எந்தவொரு சீர்வரிசையும் செய்யாமல் பின்னிட்டு தாவா சொத்தில் வாதிக்கு சட்டப்படியான பாகத்தினை பிரித்து கொடுத்துவிடுவதாக உறுதியளித்ததன் பேரில் வாதியும் பிரதிவாதியும் கூட்டு அனுபவத்திலும், சுவாதீனத்திலும் இருந்து வருகிறார்கள். இந்நிலையில், வாதி கடந்த 18.12.2022ம் தேதியன்று ஊர் பெரியோர்கள் மற்றும் பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் பிரதிவாதியை அணுகி வாதி தனக்குரிய சட்டப்படியான பாகத்தை சுமூகமான முறையில் பிரித்து தனி சுவாதீனம் வழங்குமாறு கேட்டதற்கு பிரதிவாதி பாகம் பிரித்து கொடுக்க முடியாது என்று திட்டவட்டமாக கூறிவிட்டார். தாவா சொத்தில் வாதி பிரதிவாதியை தவிர வேறு யாருக்கும் எந்தவொரு உரிமையும், பங்கு பாத்தியமும் எக்காலத்திலும் கிடையாது. எனவே தாவாபடி தீர்ப்பு செய்ய வேண்டும் என வாதிட்டார்.

8. வாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் வாதுரை கேட்கப்பட்டது. வாதி தரப்பு சாட்சியம் மற்றும் ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. வாதி தரப்பில் 17.06.1985 தேதியிட்ட பிரதிவாதியின் பெயரில் உள்ள பாகப் பிரிவினை பத்திரம் வா.சா.ஆ 1 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வா.சா.ஆ.1 ஆவணத்தை பரிசீலித்ததில், பிரதிவாதிக்கு வாதியும் அவரது தாயாரும் சட்டப்படியான வாரிசுகள் ஆவார்கள். தாவா சொத்தானது ஆதியில் பிரதிவாதியின் தகப்பனார் தானப்ப கவுண்டருக்கு பாத்தியப்பட்டு அவரது சுவாதீனத்தில் இருந்துவந்தது. அவரது இறப்பிற்கு பின்னிட்டு அவரது வாரிசுகளான பிரதிவாதிக்கும் அவரது சகோதரர்களுக்கும் பாகப் பிரிவினை பத்திரம் 17.06.1985 தேதியில் ஏற்படுத்தப்பட்டது. மேற்படி பாகப் பிரிவினை பத்திரத்தில் கண்ட "ஏ" ஷெட்யூல் சொத்தானது பிரதிவாதிக்கும் அவரது வாரிசுக்கும் பாத்தியப்பட்டது என்று ஆவண வாசகம் கண்டு எழுதப்பட்டுள்ளது. ஆகவே தாவா சொத்தானது பிதுரார்ஜித வகையில் பாத்தியப்பட்ட சொத்து என்பதை அறிய முடிகிறது. மேலும் புலவரைபடம் வா.சா.ஆ 2 ஆகவும், வழிகாட்டி மதிப்பு வா.சா.ஆ 4 ஆகவும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

9) வாதி தனது வழக்குரையிலும், பிரமாண வாக்குமூலத்திலும் இந்த பிரதிவாதியிடம் பாகம் பிரித்து கொள்ள 18.12.2022 தேதியில் ஊர் பெரியவர்கள், பஞ்சாயத்தார்கள் முன்பு கேட்டுக் கொண்ட போதும் பிரதிவாதி பாகம் பிரித்துக் கொடுக்க முடியாது என்று கூறியதாக குறிப்பிட்டுள்ளார். தாவா சொத்தானது பாகப் பிரிவினை மூலம் பிரதிவாதிக்கு கிடைக்கப் பெற்ற A ஷெட்யூல் சொத்து என்பது வா.சா.ஆ 1ன் மூலம் தெரிய வருகிறது. வாதி வழக்குரையில் குறிப்பிட்டுள்ளபடி வாதிக்குரிய பாகத்தை பிரித்து கொடுப்பதை மறுத்துரைத்து வழக்கை நடத்த முன்வராமல் பிரதிவாதி இந்நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை என்பதால் அவரை பொறுத்து ஒருதலை பட்ச உத்தரவு ஏற்பட்டுள்ளது.

10) வாதி தரப்பு சாட்சியம் மற்றும் வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள சான்றாவணங்களிலிருந்து தாவா சொத்தானது பிரதிவாதிக்கு பிதுரார்ஜித வகையில் (ancestral) 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டுள்ளதால், வாதிக்கும் தாவா சொத்தில் பாகம் ஏற்பட்டுள்ளது. மேற்படி சொத்துக்கள் இதுவரை பாகம் பிரிக்கப்படவில்லை என்பது வாதி தரப்பில் நிரூபணம் செய்யப்பட்டுள்ளது. வாதி தரப்பில் முன்னிலைப்படுத்தியுள்ள

சாட்சியம் மற்றும் ஆவணங்களும் அவரது வழக்கை நிரூபிக்கும் விதமாக அமைந்துள்ளது. எனவே, வாதி வழக்குரையில் கோரியபடி 1/2 பாகம் பெற உரிமை உடையவர் என்றும், தாவா சொத்தினை பொறுத்து வாதியின் அமைதியான கூட்டு அனுபவ சுவாதீனத்திற்கு இடையூறு செய்யக்கூடாது என்றும் எந்தவொரு வில்லங்க பாராதீனத்திற்கு உட்படுத்தக்கூடாது என வாதி தாவாவில் கோரியுள்ள நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரமும் வாதிக்கு கிடைக்கத்தக்கது என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

முடிவாக, இந்த தாவா அனுமதிக்கப்படுகிறது. தாவா சொத்தில் வாதிக்கு 1/2 பாகம் உரிமை உள்ளது என்று முடிவு செய்து முதல் நிலை தீர்ப்பாணை பிறப்பித்து தீர்ப்பளிக்கப்படுகிறது. வாதியின் அமைதியான கூட்டு அனுபவ சுவாதீனத்திற்கு பிரதிவாதி இடையூறு செய்யக்கூடாது என்றும் எந்தவொருவில்லங்க பாராதீனத்திற்கும் உட்படுத்தக்கூடாது என்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கி தீர்ப்பளிக்கப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் விரிவாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் படித்து பார்த்து பிழைதிருத்தம் செய்யப்பட்ட பின் 2023ம் ஆண்டு ஜூன் மாதம் 30-ம் நாளான இன்று இந்நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

ஒம்./-ஞான பாலகிருஷ்ணன்
சார்பு நீதிபதி,
ஓமலூர்.

**<u>வாதி தரப்பு சாட்சிகள்.-</u>**

வா.சா.1 பழனியம்மாள் (வாதி)

**<u>வாதி தரப்பு சான்றாவணங்கள்.-</u>**

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | 17.06.1985 | பிரதிவாதியின் பெயரில் உள்ள பாகப் பிரிவினை பத்திரம் - சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.2 | – | சர்வே எண் 344, 245, 246 ஆகியவைகளுக்கான FMB map- computer copy |

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.3 | – | வாதியின் ஆதார் அட்டை - நகல் |
| வா.சா.ஆ.4 | – | வழிகாட்டி மதிப்பு - கணினி நகல் |

**<u>பிரதிவாதி தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்.</u>-** இல்லை .-

ஒம்./-ஞான பாலகிருஷ்ணன்
சார்பு நீதிபதி,
ஓமலூர்.